00019

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

விசேட தேவைகள் சார் கல்வியில் பட்டமேல் டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் - 2022/2023

இறுதிப்பரீட்சை – 2022/2023

**SNP8341/SNP8531**– விசேட தேவைகள் சார் கல்வியில் தத்துவ பகுப்பாய்வு

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 09.12.2023 நேரம்: பி.ப. 01.30 - பி.ப 04.30

பகுதி **I** இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி **II** இல் எவையேனும் மூன்று (03) வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.

## பகுதி – I

1. கல்வி எனும் எண்ணக்கருவை உங்கள் சொந்த மொழிநடையில் விளக்குக.
2. உள்ளடங்கல் வகுப்பறையில் கற்பிக்கும் ஆசிரியர்களின் கல்வித் தத்துவத்தின் மீதான தேர்ச்சியின் ஐந்து (05) முக்கியத்துவங்களைக் குறிப்பிடுக.
3. சமூகமயமாக்கலின் அடிப்படை பண்பியல்புகள் குறைந்தது ஐந்தினை (05) விளக்குக.
4. சமூகமயமாக்கலின் இரண்டு (02) வகைகளைப் பெயரிட்டு எடுத்துக்காட்டுக்களை மேற்கோள் காட்டிச் சுருக்கமாக விளக்குக.
5. மரியா மாண்டிசோரியின் கல்வித் தத்துவத்தில் பல அடிப்படைக் கொள்கைகளைக் கொண்டுள்ளன. அந்த அடிப்படைக் கொள்கைகளைக் குறிப்பிட்டு அவற்றில் ஒன்றைச் (01) சுருக்கமாக விவரிக்குக.
6. "கல்வி குழந்தையை சுதந்திரமாகவும் சுயாதீனமானவர்களாகவும் மாற்ற வேண்டும்" - மகாத்மா காந்தி
   விசேட கல்வித் தேவைகளைக் கொண்ட பிள்ளைகளின் விருத்திக்கு ஏற்ப மேலே குறிப்பிட்டுள்ள கூற்றினை விளக்குக.
7. விசேட கல்வியின் பரிமாண வளர்ச்சியின் ஒருங்கிணைப்பு நிலை என்ற எண்ணக்கருவைச் சுருக்கமாக விளக்குக.
8. 'விசேட கல்வித் தேவைகள்' மற்றும் 'விசேட தேவைகள் சார் கல்வி' ஆகியவற்றுக்கு இடையே உள்ள தொடர்புகளை விளக்குக.

**(05 x 08 = 40 புள்ளிகள்)**

## பகுதி – II

9.

**i.** ஜீன் ஜாக் ரூசோ (Jean Jacques Rousseau) முன்மொழிந்த ஐந்து (05) கல்வி நிலைகளைக் குறிப்பிடுக. **(04 புள்ளிகள்)**

**ii.** வகுப்பறையில் பல்வகைப்பட்ட தேவைகளைக் கொண்ட மாணவர்களுடன் தொடர்புடைய வகையில் ஜீன் ஜாக் ரூசோ முன்வைத்த கல்விக் கொள்கைகளை ஆராய்க. **(06 புள்ளிகள்)**

**iii.** உள்ளடங்கல் வகுப்பறையில் பல்வகைப்பட்ட தேவைகளைக் கொண்ட மாணவர்களுக்கு மேலே குறிப்பிட்ட ஜீன் ஜாக் ரூசோவின் கொள்கைகளை நீங்கள் எவ்வாறு பயன்படுத்துவீர் என்பதை, உதாரணங்களை மேற்கோள் காட்டி விளக்குக. **(10 புள்ளிகள்)**

10. i. ராவ் மற்றும் பலர் (Rao et al. ) வழங்கிய தேவைகள் சார் கல்வியின் ஏழு (07) கோட்பாடுகளை விளக்குக.
(05 புள்ளிகள்)

ii. மேற்கூறிய விசேட தேவைகள் சார் கல்வியின் கோட்பாடுகளை இலங்கைக் கல்வி முறைமையில் நடைமுறைப்படுத்துவதில் உள்ள சவால்களை உதாரணத்துடன் ஆராய்க. (07 புள்ளிகள்)

iii. குறிப்பிட்ட சவால்களை வெற்றிகொள்வதற்கு நான்கு (04) நடவடிக்கைகளை பரிந்துரைக்கவும்.
(08 புள்ளிகள்)

11. i. இலங்கையில் தொழிற்கல்வி நடைமுறைகளின் வளர்ச்சியை விளக்குக.
(06 புள்ளிகள்)

ii. மாணவர்களின் தொழிற்கல்வி நடைமுறைகளுக்கு ஏற்ப மகாத்மா காந்தி மற்றும் கார்ல் மார்க்ஸ் முன்மொழிந்த கல்விக் கொள்கைகளை ஒப்பிடுக. (06 புள்ளிகள்)

iii. இலங்கைச் சூழலில் விசேட கல்வித் தேவைகளைக் கொண்ட மாணவர்களின் தொழிற்கல்வியை மேம்படுத்த மகாத்மா காந்தி மற்றும் கார்ல் மார்க்ஸ் முன்மொழிந்த கொள்கைகளை நாம் எவ்வாறு நடைமுறைப்படுத்தலாம் என்பதனை நான்கு (04) செயற்பாடுகளை உதாரணங்களாக முன்வைத்து விளக்குக.
(08 புள்ளிகள்)

12. i. குடும்பம் என்ற எண்ணக்கருவை உங்கள் சொந்த மொழிநடையில் வரைவிலக்கணப்படுத்துக.
(04 புள்ளிகள்)

ii. மூன்று (03) வகையான பெற்றோரியல் பாங்குகள் மற்றும் அவர்களின் பிள்ளைகளின் மூன்று (03) வகையான நடத்தை வகைகளை விளக்குக.
(06 புள்ளிகள்)

iii. விசேட கல்வித் தேவைகளைக் கொண்ட பிள்ளைகளில் பெற்றோரியல் பாங்குகள் எவ்வாறு அப்பிள்ளைகளில் மனவெழுச்சி மற்றும் நடத்தை சிக்கல்களை ஏற்படுத்துவதற்குக் காரணியாக அமைகின்றன என்பதை பொருத்தமான எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குக. (10 புள்ளிகள்)

13. i. "சமவயதுக் குழு என்பது விசேட கல்வித் தேவைகள் மற்றும் விசேட கல்வித் தேவைகள் இல்லாத சாதாரண குழந்தைகளின் முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் ஆயுட்கால சமூகமயமாக்கல் முகவராகும்"
மேலே குறிப்பிட்டுள்ள கூற்றை பொருத்தமான உதாரணங்களுடன் நியாயப்படுத்துக.
(05 புள்ளிகள்)

ii. விசேட கல்வித் தேவைகளைக் கொண்ட குழந்தைகள் தங்கள் சமூகமயமாக்கல் செயல்பாட்டில் சமவயதுக் குழுவினருடனான இடைத்தொடர்பைப் பேணுவதில் எவ்வகையான சவால்களை எதிர்கொள்கிறார்கள் என்பதை விளக்குக. (06 புள்ளிகள்)

iii. நீங்கள் ஓர் உள்ளடங்கல் வகுப்பின் ஆசிரியராக, விசேட கல்வித் தேவைகளையுடைய மற்றும் விசேட கல்வித் தேவைகளையுடைய மற்றும் விசேட கல்வித் தேவைகள் இல்லாத சாதாரண மாணவர்களிடையே சகபாடித் தொடர்புகளை மேம்படுத்த எவ்வகையான உத்திகளை பயன்படுத்துவீர். (09 புள்ளிகள்)

14. i. சமூக நகர்வு (Social mobility) என்றால் நீங்கள் கருதுவது யாது? (05 புள்ளிகள்)

ii. உதாரணங்களை மேற்கோள் காட்டுவதன் மூலம் விசேட கல்வித் தேவைகளைக் கொண்ட மாணவர்கள் தங்கள் வாழ்க்கையில் நேர்மறையான சமூக இயக்கத்தில் எதிர்கொள்ளும் சவால்கள் யாவை என்பதை விளக்குக. (07 புள்ளிகள்)

iii. இலங்கைச் சூழலில் விசேட கல்வித் தேவைகளைக் கொண்ட பிள்ளைகளின் நேர்மறையான சமூக நகர்வில் வெகுஜன ஊடகங்கள் வகிக்கும் பங்கை உதாரணத்துடன் விளக்குக. (08 புள்ளிகள்)

- *முழுப்பதிப்புரிமை பெற்றது* -

iii. As an inclusive class teacher, what are the strategies you can use to improve peer interaction between students with special educational needs and without special educational needs.

(09 marks)

14. i. What do you mean by social mobility of children with special educational needs?

(05 marks)

ii. Illustrate by citing example, what are the challenges faced by students with special educational needs in positive social mobility in their life? (07 marks)

iii. Explain with example the role plays by the mass media in positive social mobility of children with special education needs in Sri Lankan context. (08 marks)

*-Copyrights reserved-*